22.07.2025

O.S.No. 118/2021

PW1– இன்பராஜ்– த/பெ. முத்துசாமிபாண்டி நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.07.2025

<u>குறுக்கு விசாரணை :</u> (பிரதிவாதி தரப்பில்)

1. என் தகவலின் அடிப்படையில்தான் இந்த வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

2. பிராது 1ம் தபசில் சொத்தான புல எண்.204ம், 6ம் தபசில் சொத்தாண கிணறும் சேர்ந்தணையாக உள்ளது என்றால் சரிதான்.

3. தாவா கிணறானது வழக்கில் வாதியின் இடத்தில் உள்ளது. மேற்படி கிணற்றில் இருந்துதான் புல எண்.204க்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் சரிதான்.

4. புல எண்.204 தொடர்பாக எந்த ஆட்சேபனையும் செய்யப்படவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும்.

5. புல எண்.218 ல் எனக்கு 1ஏக்கர் 10 செண்ட் இடம் உள்ளது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு உரிமை உள்ளது என்றால் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் உரிமை உள்ளது. கிரைய ஆவண எண் தெரியாது.

6. புல எண்.218ல் நான் வாங்கியுள்ள இடத்திற்கு வடக்குபக்கம் எனது இடமான புல எண்.219 உள்ளது. தெற்கே வாதியின் இடம் உள்ளது மேற்கே வண்டிப்பாதை, கிழக்கே பிரதிவாதியின் இடம் உள்ளது. எனது இடத்தில் புல எண் உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது.

7. புல எண்.218ல் தென்பக்கமாக கிணறு உள்ளது. அதில் 3ல் 1 பங்கு எனக்கு பாத்தியப்பட்டது. மேற்படி சங்கதிகள் எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல.

8. 1989ல் நான் செல்வராஜ் என்பவரிடமிருந்து சர்வே எண்.274/1ல் 18 செண்ட் நிலமும், 274/10ல் 10 செண்ட் நிலமும் கிரையம் வாங்கியுள்ளேன். மேலும் அதே இடத்தில் சர்வே எண்.341/16ல் உள்ள கிணற்றில் 20ல் 1பங்கு எனக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான்.

9. புல எண்.218/5ல் வாதிக்கு 1 ஏக்கர் 57 செண்டில் இடம் இருந்தது, அதில் கூடுதலாக 47 செண்ட் இடம் உள்ளதால் ஆவண எண்.1040/1989 பதிந்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் விலை கொடுத்து வாங்கினேன்.

10. புல எண்.218 எத்தனை உட்பிரிவுகளாகியுள்ளது என்று எனக்கு தெரியாது. 218ல் மொத்தம் 3பேருக்கு தலா 1ஏக்கர் 10 செண்ட் உள்ளது. அதில் எனக்கும் 1ஏக்கர் 10 செண்ட் உள்ளது.

11. புல எண்.218 ல் எனக்கு பட்டா உள்ளதா என்றால் நான் பட்டா வாங்கவில்லை. புல எண்.218 ல் உட்பிரிவாகியுள்ளது அதை பொறுத்து நான் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

12. புல எண்.218 ல் உள்ள கிணற்றில் நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் உட்பிரிவு எண்ணுடன் கிணறு துலங்குகிறது என்றால் சரிதான். புல எண்.218 ல் உள்ள கிணறுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு 3 ல் 1 பங்கு உள்ளது.

13. புல எண்.218 ல் உட்பிரிவு செய்யப்பட்ட எனது சொத்திற்கு புல எண்.219 கிணறு வழியாக தான் நான் தண்ணீர் பாய்ச்சுகிறேன் என்றால் சரியல்ல.

14. புல எண்.218 ல் கிணறு சம்பந்தமாக தென்காசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.375/1984 வழக்கு நடைபெற்றது என்றால் சரியல்ல.

15. கிணற்றில் நேரமோ, மணிக்கணக்கோ கிடையாது. எனக்கு 3 ல் 1 பங்கு உள்ளது. மேற்படி அசல் வழக்கில் எனக்கு 16 மணி நேரம் தண்ணீர் பாய்ச்சும் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. செல்வராஜ்க்கு 88 மணிநேரமும், தனராஜ்க்கு 16 மணிநேரமும் பிரித்துக் கொள்ளவேண்டும் என வழக்கில் உத்தரவு பகரப்பட்டது என்றால் சரியல்ல.

16. எனது சொத்திற்கு கிழக்கே புல எண்.219 உள்ளது. புல எண்.219 ல் எனக்கு 6 ஏக்கர் 5 செண்ட் இடம் உள்ளது.

17. புல எண்..218 மற்றும் புல எண்.204 ல் ராமநாத செட்டியாரிடமிருந்து நாங்கள் 3 பேரும் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். புல எண்.219 ல் உள்ள சொத்தை ராமநாத செட்டியாரிடமிருந்து தனராஜ்–ம், செல்வராஜ்–ம் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. மீனாட்சியம்மாளிடம் கிரையம் வாங்கினார்கள். நானும் மீனாட்சியம்மாளிடமிருந்து 6 ஏக்கர் 5 செண்ட இடத்தை இந்த புல எண்ணில் வாங்கினேன்.

18. புல எண்.219 ல் 2 கிணறுகள் உள்ளது. 1 கிணறானது வடக்கேயும், மற்றொரு கிணறானது தெற்கேயும் உள்ளது. வடக்கே உள்ள கிணறு எனது இடத்தில் உள்ளது. தெற்கே உள்ள கிணறானது எனக்கும், வாதிக்கும் பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது.

19. மேற்படி கிணற்றை நாங்கள் ராமநாத செட்டியாரிடம் வாங்கினோம். சாட்சி பின்பு மீனாட்சியம்மாளிடம் இருந்து வாங்கினோம் என கூறினார்.

20. வாதியின் தந்தை 1983 ல் ராமநாத செட்டியாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. அதே ஆண்டில் நான், வாதியின் தந்தை கிரையம் வாங்கிய 3 நாட்களில் மீனாட்சியம்மாளிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அதிலிருந்து 1 மாதம்

கழித்து வாதி தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணமானது இதே புல எண்ணைப் பொறுத்து ராமநாத செட்டியாரிடமிருந்து வாங்கிய ஆவணம் என்றால் எனக்கு தெரியாது.

21. 1983 ஆவணத்தில் சொத்துவிவரத்தில் செல்வராஜ்க்கு கிரையம் கொடுக்கும் இடத்திற்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1983 ல் ராமநாத செட்டியார் செல்வராஜ்க்கு கொடுத்த அதே சொத்தை நான், மீனாட்சியம்மாளிடம் இருந்த கிரையம் வாங்கியதாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

22. புல எண்.219 உட்பிரிவு செய்வதற்குமுன்பே ராமநாத செட்டியார்தான் முழு உரிமையாளர் என்றால் சரிதான். அவரின் மனைவி மீனாட்சி நாச்சியார். புல எண்.219 சொத்தானது ராமநாத செட்டியாரின் மனைவி பெயரில்தான் உள்ளது, நான் அவரிடமிருந்துான் கிரையம் வாங்கினேன்.

23. புல எண்.219 ல் ராமநாத செட்டியாரின் மனைவிக்கு எந்த உரிமையும் கிடையாது, நான் உரிமையற்ற நபரிடம் இருந்து கிரையம் வாங்கியதால் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

24. மேலும் மீனாட்சி நாச்சியார்தான் சொத்தின் உரிமையாளர் என்பதை காண்பிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

25. புல எண்.218 உட்பிரிவானதா என்றால் எனக்கு தெரியாது. புல எண்.219 ல் நான் 5 அடி அகல இடத்தை வாதியின் தந்தைக்கு கிரையம் கொடுத்துள்ளேன். அதற்கு ஈடாக மின்சார இணைப்பை வாங்கிவிட்டேன்.

26. நான் 5 அடி கிரையம் கொடுத்த இடத்திற்கு தெற்கு என் கையிருப்பு இடம் உள்ளது. இது இல்லாமல் வண்டிப்பாதை தனியாக உள்ளது.

27. வாதி அனுபவித்துவரும் சொத்தானது எனது வரைபடத்தில் உள்ளதுபோல் சேர்ந்தணையாக உள்ளது என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.